**CC.NO.43/2020 PW-2**

**நாள்** : 14.12.2023

பெயர் : லோகநாதன்

த/பெ : வேணு

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

1. நீங்கள் என்ன தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் தியேட்டரில் சமோசா விற்றுவிட்டு வருகிறேன். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் புவனேஸ்வரி மற்றும் மதன் என்ற இரண்டு பிள்ளைகள் உள்ளனர். உங்களுடைய மகளுக்கும் எதிரி ஜெய்கணேசுக்கும் 2017 ஆம் வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் ஆமாம். ஆற்காட்டில் அவர்கள் இருவரும் திருமணத்திற்கு பிறகு வாடகை வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம். உங்கள் மகளும் எதிரி ஜெய்கணேசும் 2 மாதம் தான் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் ஆமாம். அதன் பிறகு 2017 ஆம் வருடம் உங்கள் மகள் உங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் ஆமாம். திருமண சமயத்தில் பெண் கொடுத்தால் போதும் வேறு நகைகள் எதுவும் போடவேண்டாம் என்று எதிரிகள் தரப்பில் சொல்லப்பட்டது என்றால் ஆமாம். உங்களுடைய மகளின் மாமியார் எந்த தேதியில் உங்களுடைய மகளின் துணிமணிகளை கிழித்து பிரச்சினை செய்தார் என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். 2017-2018 காலக்கட்டத்தில் நீங்களோ உங்கள் மகளோ எதிரிகள் மீது புகார் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் ஆமாம். ஐயமச்சரியில் வசித்து வந்த சாந்தி முன்னெடுப்பில் தான் திருமணம் நடைபெற்றது என்றால் ஆமாம். அந்த சாந்தியும் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார் என்றால் ஆமாம். நெமிலியில் உள்ள கருணாகரன் மற்றும் திவாகரன் உங்கள் நண்பர்கள் என்றால் ஆமாம் அவர்களும் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார்கள் என்றால் ஆமாம்.

2. உங்கள் மகள் முதல் முறையாக 2019 ஆம் வருடம் தான் ராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த புகார் நிலுவையில் உள்ள சமயம் சமரசம் செய்யப்பட்டு புகார் முடிக்கப்பட்டது என்று சொன்னால் ஆமாம். 2019 ஆம் வருடம் தான் போலீசார் உங்களை விசாரித்தார்கள் என்றால் ஆமாம். அதன் பிறகு விசாரிக்கவில்லை. ரூ.2 லட்சம் திருமண சமயத்தில் எதிரிகளுக்கு பணம் கொடுத்துள்ளதாக முதல் விசாரணையில் சொல்லியதற்கு ஆதாரங்கள் எதையும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். உங்களை எங்கு வைத்து போலீசார் விசாரித்தார்கள் என்றால் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை கையெழுத்து பெற்றார்கள் என்றால் ஞாபகமில்லை. உங்களை வழக்கில் விசாரித்தது யார் என்றால் ஆய்வாளர் அம்மா விசாரித்தார். இந்த வழக்கை விசாரித்த ஆய்வாளர் மீது மனித உரிமை ஆணையத்தில் புகார் கொடுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் ஆமாம். எதிரி உஷா மற்றும் இறந்துபோன பழனி ஆகியோரை ஆய்வாளர் 5 லட்சம் ரூபாய் கேட்டு மிரட்டியதாக தான் மனித உரிமை ஆணையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் தெரியாது. ஆய்வாளர் மனித உரிமை ஆணையத்தில் அவர் மீது கொடுக்கப்பட்ட வழக்கில இருந்து தப்பிப்பதற்காக உங்களை வைத்து ஒரு வாரம் கழித்து ஒரு பொய்யான புகாரை கொடுக்கவைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதனால் தான் உங்களுக்கு அந்த விவரங்கள் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மகள் ஜெய்கணேஷ் இடமிருந்து விவாகரத்து கோரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம்.

3. அசா1 உங்கள் மகளும் எதிரி ஜெய்கணேசுக்கும் மனம் ஒத்துப்போகாகத ஆய்வாளர் சுப்புலட்சுமியை மனித உரிமை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக தான் இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த

**வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் உங்களிடமோ உங்கள் மகளிடமோ எந்த காலத்திலும் வரதட்சணையும் பணமும் கேட்கவில்லை என்றால் கேட்டார்கள். நீங்கள் சாட்சியம் அளிப்பது தவறு அவர்கள் எந்த ஒரு வரதட்சணையும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

D NAVEEN DURAI BABU Digitally signed by D NAVEEN DURAI BABU

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.